**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 212/2019</u>**

பெயர் : ஈசாக் பாலகுரு D.W.1. Cross

த/பெ. : நாகலிங்கம்

தேதி : 20.11.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

1. பிவாசாஆ 1 ல் உள்ள ரசீதுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மின் இணைப்பு எண்கள் 316 மற்றும் 766 என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் மின் கட்டண அட்டையின் மின் இணைப்பு எண் 316 மற்றும் 766 என்றால் சரிதான். அந்த மின் கட்டண அட்டைகள் முறையே **வாசாஆ 13** மற்றும் **வாசாஆ 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கானது முதலில் 2017ம் ஆண்டு சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 2019ம் ஆண்டில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யபட்டது என்றால் சரிதான். பிவாசாஆ 1 ல் உள்ள ரசீதுகளும் 2019 மற்றும் அதன் பின்னிட்டு ஏற்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான். மின்சாரம் பயன்பாடு கணக்கீடு செய்யும் அலுவலர்கள் அந்த பயன்பாட்டின் அளவை மின் கட்டண அட்டையில் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான்.

2. வழக்குரையில் பத்தி 6ல் 2017 ஆண்டு மே மாதம் நான் பாஸ்டர் பதவியில் இருந்து நீக்கபட்டு வழக்கு சொத்தில் உள்ள திருச்சபை பூட்டி நிர்வாகத்தினர் எடுத்துக்கொண்டுவிட்டார்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்று வரை தாவா சொத்தில் உள்ள திருச்சபை பூட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் சாவி என்னிடம் தான் உள்ளது. வாதி திருச்சபை கதவில் உள்ள கைபிடியில் தனியாக சங்கிலியுடன் சேர்த்து பூட்டை போட்டுள்ளார். நான் எனது நிருபண வாக்குமூலத்தை 27.04.2025 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் மேற்படி விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தின் நிர்வாகம் 2017 ம் ஆண்டிலேயே வாதியின் நிர்வாகத்திற்கு சென்று விட்டது என்றாலும், அப்போதிலிருந்தே தாவா சொத்தில் உள்ள திருச்சபை பூட்டப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் மேற்படி திருச்சபையின் சாவியை வைத்திருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. பிவாசாஆ 2 ஆனது எனக்கு வந்த அழைப்பாணை என்றால் சரிதான். அதில் Karumal Church காழியப்பநல்லூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிவாசாஆ 5 ல் சர்ச் முகவரி என்று Carmel திருச்சபை தில்லையாடி மெயின் ரோடு, காழியப்பநல்லூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 5ல் The Synod of Pentecostal Churches. Reg.Office Old nathan Road, Madurai−625014, Admin Office: 7th cross Street, King's Highway Lake area, Nungampakkam, Chennai −34 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள திருச்சபையின் நிர்வாகம் Gems Action Centre நிர்வாகத்தின் கீழ் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி தான் வாசாஆ 4 மற்றும் வாசாஆ 5 ன் படி மேற்படி Gems Action Centre க்கு இணாம் சாசனம் மூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4. பிவாசாஆ 6 ஆனது தாவா சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். அதில் தற்கால தலைவர் Earnest Ravi என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1 ஆனது Gems Action Centreன் Letter Pad என்றால் சரிதான். வாசாஆ 1ல் Gems Action Centreன் Regd. Office: 11, 13th cross street, New Colony, Crompet, Chennai−44. Feild Office: Dehri – on – Sone, Bihar−821 307 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1ஐ வழங்கிய அதிகாரி Earnest Ravi என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் தாவா சொத்தின் சொத்து விபரம், சர்வே எண், நான்கெல்லை, விஸ்தீரணம் ஆகியவற்றை மறுக்கவில்லை என்றால் சரிதான். வழக்குரையின் சொத்து விபரத்தில் தாவா சொத்து காழியப்பநல்லூர் தெற்கு தெருவில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 3, பிவாசாஆ 4, பிவாசாஆ 5, பிவாசாஆ 7 ஆகியவற்றில் புதுத்தெரு , காழியப்பநல்லூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.எனவே, மேற்படி ஆவணங்கள் தாவா சொத்திற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

5. நான் எனது நிருபண வாக்குமூலத்திலோ , எதிர் வழக்குரையிலோ மின் இணைப்பு எண். 316 மற்றும் 766 ற்கு நான் தான் மின் கட்டணம் செலுத்தி வருவதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை நான் நிருபண வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தும் அதில் உள்ள திருச்சபையும் வாசாஆ 1 படி வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள திருச்சபை 2017 ற்கு பிறகு பூட்டப்பட்டு வாதியின் வசத்தில் இருந்ததால் தான் வாசாஆ 13 மற்றும் வாசாஆ 14 தொடர்ச்சியாக மின் பயன்பாட்டு அளவு குறிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் மின் கட்டணத்தை 2019 ற்கு பிறகு நேரடியாக மின் வாரியத்திற்கு சென்றும், இணையவழி

மூலமாக வும் செலுத்திவருகிறேன் என்றால் சரிதான். பிவாசாஆ 3 ஆன ஆவணங்கள் யார் வேண்டுமானாலும் செலுத்தலாம் என்பதால் அந்த ஆவணம் தாவா சொத்திற்கான எனது அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் 2019 ஆண்டிற்கு பிறகு மின் கட்டணத்தை செலுத்திவிட்டு நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக பொய்யான தோற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் பிவாசாஆ 1 மூலமாக எந்த அனுகூலமும் நான் பெற முடியாது என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தானது வாசாஆ 1ன் படி வாதியின் நிர்வாகத்தில் இருப்பதால் தான் வாசாஆ 2, 6, முதல் 11 வரையிலான ஆவணங்கள் வாதியால் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து 2017 முதல் பூட்டியுள்ளதாக தான் வாசாஆ 12 ஆன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஊழியம் செய்தது தாவா சொத்தில் உள்ள திருச்சபை இல்லை என்றாலும், வேறு திருச்சபையில் ஊழியம் செய்தேன் என்றாலும் சரியல்ல. எனது எதிர் வழக்குரை, நிருபண வாக்குமூலம் மற்றும் வாசாஆ 3ல் உள்ள கையொப்பங்கள் என்னுடையது என்றால் சரிதான். வழக்குரையில் 2017ம் ஆண்டு என்னை நீக்கிவிட்டார் என நான் கடிதம் போட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அதை உறுதிபடுத்த தான் நான் வாசாஆ 3 அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து இது நாள் வரை வாதியின் அனுபவத்தில் பூட்டப்பட்ட நிலையில் தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியில் நான் குடியிருந்து வருவதாக சொல்வது தவறு என்றாலும், தாவா சொத்தில் எந்த குடியிருப்பும் இல்லை என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக எனது தரப்பு ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூட்டப்பட்டுள்ளதால் அதன் Status quo வை வாதி மீறியதாக பொய்யாக கூறி நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு பொய்யானது என்பதால் தான் அந்த மனுவில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.